**MCOP No.43/2019**

**தேதி- 14.11.2025**

**பெயர் : திரு. சஞ்சை காந்தி, த/பெ. கன்னியப்பன்**

**ம.சா.2 07.08.2025 அன்று தாக்கல் செய்யப்பட்ட முதல் விசாரணைக்கு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை-**

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை-**

நான் ஆரணி கொசப்பாளையத்தில் உள்ளேன். விபத்தில் இறந்து போன சங்கர் எந்த ஊர் என்றால் எனக்கு ஞாபகம் வரவில்லை. விபத்து நடந்த தேதி என்ன என்றால் தேதி எனக்கு சரியாக ஞாபகமில்லை, சுமார் 4 வருடங்களுக்கு முன்பு, இரவு 7.00 முதல் 8.00 மணிக்குள்ளாக விபத்து நடந்தது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் விபத்து இரவு 7.00 முதல் 8.00 மணிக்குள்ளாக விபத்து நடந்தது என்பதை பற்றி சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை. விபத்தில் காயம்பட்ட நபர் எனக்கு அறிமுகம் இல்லாத நபர் தான் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் இரு புறமும் கடைககள் இருந்தது என்றாலும், எத்தனை கடைகள் திறந்து இருந்தது என்றால் சுமார் 2, 3 கடைகள் தான் திறந்து இருந்தது. ஆரணி பேருந்து நிலையத்தில் இருந்து காமராஜர் சிலை வரை மொத்தம் எத்தனை வேகத்தடைகள் உள்ளது என்றால் 2 வேகத்தடைகள் உள்ளது, வடக்கு மாட வீதியில் ஒன்றும், ஜெமினி ஸ்டாப்பிங் தாண்டி ஒரு வேகத்தடையும் உள்ளது.

ஜெமினி ஸ்டாப்பிங்கிற்கும் மகாலட்சுமி எலக்ட்ரீக்கல்ஸ் கடைக்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 100 அடி இருக்கும். மகாலட்சுமி எலக்ட்ரீக்கல்ஸ் கடைக்கு முன்பு வேகத்தடை உள்ளது. விபத்து சமயத்தில் நான் திமிரிக்கு போய்விட்டு ஆரணி நோக்கி இரு சக்கர வாகனத்தில் வந்துக் கொண்டிருந்தேன். எனக்கு முன்பாக அரசு பேருந்து ஆரணி நோக்கி வந்துக்

கொண்டிருந்தது, அந்த பேருந்திற்கு பின்பு நான் வந்துக் கொண்டிருந்தேன். பேருந்து ப்ளூ மற்றும் வெள்ளை நிறத்தில் இருந்தது. மகாலட்சுமி எலக்ட்ரீக்கல்ஸ் முன்பாக பேருந்து நிறுத்தம் கிடையாது என்றால் சரிதான்.

விபத்திற்கு காரணமே ஓடும் பேருந்தில் இருந்து இறங்கியதால் தான் அடிப்பட்டது என்றால் சரியல்ல, பேருந்தில் பிரேக் அடித்ததில் அவர் விழுந்துவிட்டார். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் அடிப்பட்ட நபர் எந்த ஊரை சேர்ந்தவர் என்று தெரியாது என்று தான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், ரோட்டிற்கு கிழக்கு மேற்கில் உள்ள கடைகளில் உள்ள நபர்களை விசாரித்து பார்க்க வேண்டும் என்றாலும், நான் காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்காத பட்சத்தில் மனுதாரருக்காக பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Petitioners / Respondents and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge,
Fast Track Court, Arani.